பதிவுசெய்யப்பட்டது
பதிவிலக்கம் ௯௨௯.

விரோதி ௵ (1889)
ஆவணி ௴ ௨௨ உ
ஸ்தாபனம்

இந்துசாதனம்.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திராதிபதிக் கிரயம்.
யாழ்ப்பாணப் பட்டினம்: ௵ 1-க்கு ரூ 5-00
இலங்கை, இந்தியா: „ ரூ. 8 00
தொலைவாய்ப்பகுதி: „ ரூ 9.00
தனிப்பிரதி: சதம் 5
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.
முதன்முறைக்கு:—ஒருகலம் ரூ. 9-00
„ அரைக்கலம் ரூ. 4-50
„ கால்கலம் ரூ 3-00
அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா

புத்தகம்—௪௦. } யாழ்ப்பாணம்:—விபவ ௵ ஆவணி ௴ ௨௨உ, (1928 செப்டெம்பர் 6) வியாழக்கிழமை. { இலக்கம்—௨௦.

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானூர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மருப்பூந்தவி நாயகன்றாள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போதிந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதானு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ, சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, காசப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துக் குண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா ௨௦. அரைரூத்தலுக்கு ரூபா ௧௦. கால் ரூத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாகிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினால் முன்மனி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சித்தாந்த ஆயுர்வேத சுகாதார வைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டிக்களப்பு,
சிலோன்.

(M. 30.)

மூன்று அருமைவாய்ந்த நூல்கள்.

(1) மறுபிறப்புத் தூஷண பரிகாரம்.

இது கிறிஸ்தவர்களுக்கும் சைவர்களுக்குமிடையில் மறுபிறப்பு விஷயமாக நடந்ததருக்க முடிவு இதுமேயார் அறிவு பயக்கும் நூல். —192 பக்கங்களையுடையது, விலை சதம் 50.

(2) மறுபிறப்புத் தூஷண பரிகாரக் கிலிகோலபஞ்சனம்.

இது கிறிஸ்துமதம் மறுபிறப்புக் கொள்கையுடையதா அன்றோ? என்பது போன்ற பல அரிய விஷயங்களாக யாக்கோபுவுக்கும் ஞானசேகரனுக்குமிடையில் நிகழ்ந்த மேலான தருக்க முடிவு.
—57 பக்கங்களையுடையது. விலை சதம் 25.

(3) கொலைமறுத்தல் பிரசினோத்தரம். —விலை சதம் 5.

மேற்படி நூல்கள் விற்பனையும்
பிரதான இடங்கள்.

(1) சி. சு. இராஜையன், மணல் தறை ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

(2) S. S. சண்முகநாதன் புத்தகசாலை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(3) சோதிடப்பிரகாச யந்திரசாலை, கொக்குவில், யாழ்ப்பாணம்.

(Q. 111.)

இலங்கை
ஆயுள்வேத வைத்தியகல்லூரி
யாழ்ப்பாணம்.

மேற்படி கல்லூரியிற் சேர்ந்து ஆயுள்வேத வைத்தியத்தையும் ஒருங்கே கற்க விரும்புவோரும் ஆயுள்வேத சித்த வைத்தியத்தைமட்டும் (கொறஸ்போண்டன்ஸ்) லிகிதகற்பனை மூலமாகக் கற்று டிப்பிளோமா என்னும் அரங்கேற்றுப் பத்திரம் பெற விரும்புவோரும் தங்களது மனுப்பத்திரங்களை மேற்படி கல்லூரித் தலைவருக்கு அனுப்பி அக்கற்பனைக்குரிய விஷயங்களைத் தெரிந்துகொள்க. அநுபவசித்தியுள்ள டாக்டர்களுக்கும் சுதேச வைத்தியர்க்கும் கற்பனையின் கால அளவு அவர்க்குரிய அநுபவசித்திக்குத் தக்கதாய்க் குறைக்கப்படும்.

இலங்கா ஆயுள்வேத வைத்திய கல்லூரித்
(Q. 106.) தலைவர்.

யாழ்ப்பாண
ஐக்கியவியாபாரசங்கம்
லிமிட்டெட்.

1918-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

பிறதேசங்களிலிருந்து
நெல்லு
அரிசி
மற்றுஞ் சாப்பாட்டுக்குரிய சகல சாமான்களும், பலவகையான சாய்ப்புச் சாமான்களும் வருவித்து விற்பவர்கள்.

இது யாழ்ப்பாணத்தவர்களால் நடத்தப்படும் பிரபலமான வர்த்தகம்.

சாமான்கள் திறமானவை.

விலை சகாயம்.

சுதேச முயற்சியைத் தைரியப்படுத்துங்கள்

தங்கள் ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.

பெரிய கடையின் வடமேல் வீதிகளில் இக்கம்பெனிக் கடைகள் நடைபெறுகின்றன.

(Q. 108.)

சக்தி வீரிய விருத்தி லேகியம்.

(1) தற்காலத்தில் அனேகவிதமான வீரியவிருத்தி அவுடதங்கள் வெளிவந்திருப்பினும் அவற்றுள் எங்கள் சக்தி வீரியவிருத்தி லேகியமே விசேஷகுணத்தைக் கொடுக்கும்.

(2) இந்த லேகியத்தின் குணமானது உஷ்ணம் முதலிய மேகரோகங்கள் ஜீவரத்னபீடமாகிய தேகத்தைத் தாக்குவதால் உண்டாகும் எலும்புருக்கி ரோகங்களையும் அரிதஸ்கலிதமென்னும் ஓர்வித ரோகினால் நேரிட்ட இடுப்புவலியும் மலேரியாக் காய்ச்சலினால் (Malarial fever) சரீரம் மெலிந்து சாப்பாட்டில் பிரியமில்லாமல் தேக வெளுப்பு, பாண்டு, சோகை, காமாலை, வீக்கம், மலச்சிக்கு, பித்தக்கிறுதி, பித்தவாய்வு, இருதயத்துடிப்பு, நரம்புத்தளர்ச்சி, கைகால் அசதி, விரைவாதம், ஆண்தன்மை நாளுக்குநாள் குறைதல் முதலிய துர்க்குறிகளையும் நீக்கி மனோற்சாகம், ஞாபகசக்தி, வீரியவிருத்தி, தேகபலம், சரீராரோக்கியம், முதலியன உண்டாக்குவதில் மேன்மைவாய்ந்து, ஸ்திரீகளுக்கு ஏற்படும் சகல பெலவீனத்திற்கும் இதற்கு நிகர் மருந்து கிடையாது.

(3) எங்கள் சக்தி வீரிய விருத்தி லேகியத்தை 40 நாள் முறைப்படி உட்கொண்டால் தேகத்தில் ஏற்பட்ட உஷ்ணத்தை சமன்படுத்தி இரத்தத்தைச் சகல நரம்புகளிலும் ஓடச்செய்து சப்ததாதுகளுக்கும் வலுவை ஏற்படுத்தி அதிக வயதினாலும பலஈனத்தினாலும் நரம்பு சுருங்குவதால் ஏற்பட்ட சகலவித சோர்வையும் புறக்கணித்து மனரம்மியமான இன்பரசவாழ்வைத் தாத்தக்கதோர் சித்தானந்த "மகா சஞ்சீவினி" என்றல்லவோ சொல்லலாம்! இச்சாபத்தியம்!!

1 ரூத்தல் மருந்து ரூபா	10	00	}	வீ. பீ. சார்ஜ் பிரத்தியேகம்.
½ „ „ „	5	00		
¼ „ „ „	3	50		

தந்திவிலாசம்:— "Chambavee" Karainagar.

இங்ஙனம்,
பிஷக்வரர், டக்டர் எம் என். பிள்ளை எ. எம். ஏ. சீ
சிவ சாம்பவி ஔடதாலயம்,
காரைநகர், யாழ்ப்பாணம்.

குறிப்பு:—எங்கள் லேகியத்தில் ஓர்விதமான மிருகசத்துக்களும் லாகிரிவஸ்துக்களும் சேர்க்கப்படவில்லை. இவை தாவரவஸ்துக்களைக்கொண்டே தயார்செய்யப்பட்டது மேலும் எங்களிடம் அனேகவிதமான ரோகங்களுக்கு மருந்துகள் தயார்செய்யப்பட்டிருக்கின்றன மருந்து வேண்டியவர்கள் வியாதியின் குணங்கள், வயது, உத்தியோகம், புருஷர் அல்லது ஸ்திரீ என்பதையும், கலியாணமானவரா இல்லையா; வியாதி ஆரம்பித்தகாலம், முன் வேறு எவ்வித வியாதிகள் ஏற்பட்டதென்றும் விபரமாக எழுதினால் எங்களால் தீர்க்க முடியுமானால் அதற்குத்தகுந்த மருந்துகளை V. P. P. மூலமாய் அனுப்புவோம்; அல்லது தீராதரோகமா யிருந்தபக்ஷத்தில் பதில் எழுதிவிடுவோம்.

பதில் வேண்டுவோர்கள் 2 Ans. 6 Pies முத்திரையும் சிங்கப்பூர்மலாய்நாடு முதலியதொடுவாய் ராச்சியப் பகுதிகளிலிருந்து 20 cts. முத்திரையும் அனுப்பினால் விபரமாகப் பதிலெழுதப்படும்.

(Q 104)

கௌரவ லேவர் பொன்
இராமநாதனவர்கள்
இயற்றிய நூல்கள்.

1. செந்தமிழ் இலக்கணம் முதற்பாகம் (எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும்) நன்னூற் சூத்திரங்களைத் தழுவி இலகுவான உரைநடையில் இயற்றப்பெற்றது. 545 பக்கங்கள் கொண்டது. உயர்ந்த பதிப்பு ரூபா 3-00., சாதாரண பதிப்பு ரூபா2 அணா 8.
2. பகவத்கீதா — தமிழ் மொழிபெயர்ப்பும் விருத்தியுரையும் 517 பக்கங்கள் கொண்டது ரூபா 2-00.
3. திருக்குறள் பாயிரமும் இராமநாதீயம் என்ற விருத்தியுரையும் 143 பக்கங்கள் கொண்டது ரூபா 1-00.

மானேஜர்,
இராமநாதன் கல்லூரிப் புத்தகசாலை,
(H 61) சுன்னாகம், யாழ்ப்பாணம்.

சுகம் சுறுக்காயும் நிச்சயமாயுங் கிடைக்கும்.

எவ்வித நோவாயிருந்தாலுஞ்சரி,
தலைவலி
காய்ச்சல்வலி
இல்வாய்வு
இடைப்பிடிப்பு
வாதம்
சுளுக்கு
தொண்டை நோ
நெஞ்சுச்சளி
எல்லாவற்றிற்கும்

லிட்டில்ஸ் ஓரியென்டல் பாம்.

உடன் சுகந்தரும்.



மிருகக்கொழுப்புச் சேராதது

43 வருடகாலமாய் அனுபோகத்தில் சிறந்த மருந்து என்று நிச்சயிக்கப்பட்டது. அது தரும் சுகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அதின் விலை ஒரு பெரிதல்ல.

எல்லா ஷாப்புகளிலுங் கிடைக்கும்.

2—28. Little Oriental Balm and Pharmaceuticals Ltd. Madras.

(Y. 51.)

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் விபவ௵
ஆவணிமீ ௨௨௳ வியாழக்கிழமை.

அபிப்பிராய பேதம்.

சுதேசநாட்டியம் 22—8—28 புதன்கிழமை வெளிவந்த பத்திரிகையில், சாந்தி மதிக்கும் பேதிரேஸ் என்னுமொரு சிறுமியர்க்குமிடையே நடந்த சம்பாஷணையாக "ஒரு சைவாபிமானி" எழுதியுள்ள விஷயத்தையிட்டு, ஒன்றோடொன்று மாறுன இரு கடிதங்கள் இந்துசாதனத்தில் வெளியிடும்படியும் நமது அபிப்பிராயத்தைக் கூறும்படியும் அனுப்பப்பட்டுள்ளன. கடிதமெழுதியனுப்பிய இருபாலாருஞ் சைவசமயத்தவர்கள் போற்காணப்படுகின்றனர்; இவர்களுக்கிடையேயுள்ள ஆசங்கை உரும்பராய்ச் சைவாங்கில வித்தியாசாலையைப் பற்றியதாம். ஒருபத்திரிகையிலெழுதப்பட்ட விஷயத்திலெழுந்த விவகாரத்திற்கு மறுப்பும் சமாதானமும் பின்னரும் அப்பத்திரிகை வாயிலாற்றனே வெளிவருதலே மரபாகும். அப்பத்திரிகை யதிகாரிகள் தக்ககாரணமின்றி மறுப்பினன்றே அவற்றை வேறுபத்திரிகையில் வெளியிடலாகும். இக்கடிதங்களிரண்டும் சுதேசநாட்டியத்திற்கு அனுப்பப்பட அப்பத்திரிகையாசிரியர் வெளியிட மறுத்தனவாகக் காணப்படவில்லை. இந்த நியாயம் பற்றியும் வாதிக்குமிருபாலாரும் சைவாபிமானிகளாய் ஒரு சைவவித்தியாசாலையை இன்னமும் நன்னிலைப்படுத்தவேண்டுமென்னும் நோக்கமுடையவராயிருத்தலினாலும், இருபாலாரும் ஒருவர் நோக்கத்தை யொருவர் விபரீதமாக விளங்கிக்கொண்டமையே விவாதத்திற்குக் காரணமாயிருத்தலினாலும் அக்கடிதங்கள் இரண்டையும் இப்பத்திரிகையில் வெளியிடாதொழிந்து, குறித்த இருபாலாரும் எமது அபிப்பிராயத்தை அறிய விரும்புதலால், அச் சம்பாஷணை விஷயமாக எமது அபிப்பிராயத்தை மாத்திரம் இங்கே தருகின்றோம்.

சைவாபிமானி சுதேசநாட்டியத்தில் வெளியிட்ட சம்பாஷணையைச் சித்த சமாதானத்தோடு ஆராயப்புகின், அந்த விஷயம் உரும்பராய்ச்சைவாங்கில வித்தியாசாலைக்குவிரோதமாகவேனும் உரும்பராய்ச் சைவமக்களுக்கு மாறாகவேனுங் குரோதங்கொண்டு எழுதப்பட்டதெனக் கொள்வதற்குச் சற்றும் இடமில்லையாம். சைவாபிமானி நிகழ்த்தும் ஆசங்கை யென்னவென்றால், உரும்பராயிலுள்ள சைவர்களுக்கும் கிறீஸ்தவர்களுக்கும் பேதமில்லை, கணவன் சைவன் மனைவி கிறீஸ்தவள், கணவன் கிறீஸ்தவன், மனைவி சைவம், சைவர்களும் கிறீஸ்தவர்களும் சமபந்தி வகித்து உண்ணுகிறார்கள், உரும்பராய்க்கு அயலிலும் மற்றுங் கிராமங்களிலும் இருக்குந் தாழ்ந்தசாதியாரெனச் சொல்லப்படுவோர் தங்களுட் கிறீஸ்தவர் சைவரென்ற பேதத்தைப் பெரிதும் பாராட்டுகின்றார்கள், அவர்கள் ஒருபோதும் சமபந்தி வகிப்பதில்லை, கணவன் ஒருமதம் மனைவி பிறிதொருமதமாக விரும்புவதில்லை, இங்ஙனமாகவும் உயர்ந்தசாதியாரென்று உரும்பராயிலிருப்போர்களுமாத்திரம் எம்மதமும் சம்மதமா, மதபேதமில்லையா, அங்குள்ள தத்தம் இல்லங்களிற் சைவமும் கிறீஸ்துமார்க்கமும் கலந்து விரவிக்காணப்பட, காட்டுவைரவர்கோயிலில் ஆடு கோழி வெட்டுதலாகிய துர்க்கிரியை அங்குள்ளார் விடமுடியவில்லை, மதுபானத்தை விடமுடியவில்லை, இப்படியெல்லாமிருக்க, பிள்ளைகள் படிப்பதற்கு மாத்திரம் சைவப்பள்ளிக்கூடம் வேண்டுமோ? என்பனபோன்றவைகளேயாகும். சுருங்கச்சொல்லுகில் சைவாபிமானியின் கூற்று, பத்தியங்காப்பதில்லை, அநுபானத்தைக் கைக்கொள்வதில்லை, மருந்தைமாத்திரம் உண்டால் நோய் நீங்குமாம் என்னும் நியாயம் போன்றதாம். இதனால் மருந்து நோயை நீக்கமாட்டாதென அபிமானி கூறுகின்றாரென்று நாம் கொள்ளக்கூடாது. அபிமானியின் கூற்றுச் சிலர்க்குச் சுடுசொற்போற் காணப்படும். காணப்படினும் "மாசற்ற நெஞ்சுடையார் வசைசொல்லினிது ஏனையவர் பேசுற்ற இன்சொற் பிறிதென்க" எனவும் இனியவர் என் சொல்லினும் இன்சொல்லே இன்னார் கனிமொழியுங் கடுவே, எனவும் வரும் ஆன்றோர் வாக்கின் பிரகாரம் கூற்றின் வன்மையைப் பொருட்படுத்திக் குரோதப்படாது அவர் கூற்றின் நோக்கத்தைப் பேணிக்கொள்ளல்வேண்டும்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"

என்றார் பெரியோரும்.

இனி நமது சைவாபிமானியும் சிறிது அவதானிக்கவேண்டிய சிலவுள.

"இன்சொலாலன்றி இருநீர்வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே"

என்றபிரகாரம் நன்னோக்கத்தோடேனும் நம் ஒன்றைச்சொல்லும்போதும் இன்சொல்லிலேச் சொல்லுதல் நன்றாம். சைவாபிமானியின் கூற்று உரும்பராய்வாசிகளெல்லாருடைய உள்ளத்தையும் சுடும் இயல்பினதாயிருப்பதாகின்றது. சிலர் செய்யுங் குற்றத்திற்காகப் பலரையும் பழிகூறுவது முறையன்று. இனி, ஆங்குள்ள சைவவித்தியாசாலை விஷயமாகச்சொல்லுதில், சைவவித்தியாசாலைகளும் ஊருக்குச் சக்கடி சிலகாலத்திற்காயினும் நடத்த வேண்டியிருக்கின்றன. சமயாபிமானங் குறைந்த ஊராரிருந்தால் அங்குள்ளார்க்குக் காலகதியில் அதனையூட்டிச் சீர்ப்படுத்தலேயல்லாமல் முற்றும் முந்தியில்லாத சமயாபிமானத்தைச் சோபானமுறையால் ஊட்டமுடியுமே யல்லாமல் ஒரே முறையில் ஊட்டுதலும் அநுசரிக்கச்செய்தலும் அரியகாரியமாகும். சங்கமப் பள்ளிக்கூடங்களிற் பயிலும் பிள்ளைகளைச் சைவப்பள்ளிக்கூடத்திற்கு இயன்றவரையில் இழுத்துக்கொண்டு மெல்லமெல்லச் சைவாபிமானத்தை யூட்டலாமென்பதே மேற்படி வித்தியாசாலை அதிகாரிகளின் நோக்கம்போலும். மேலும், குறித்த சைவ ஆங்கில வித்தியாசாலை முதல் உபாத்தியாயரைக் குறைகூறுவது பாதகமாகும். ஏனென்றால் அவர் அந்நியநாட்டைச் சார்ந்தவர். அதிக பிள்ளைகள் வரவு பரீக்ஷைகளிற் சித்தியாகிய இவற்றில் வித்தியாபகுதியாரையும் பள்ளிக்கூட அதிகாரிகளையும் ஊரவர்களையும் பிள்ளைகளையும் திருப்திப்படுத்த வேண்டும் நிலைமையுள்ளவர். வித்தியாபகுதியாரும் அதிகாரிகளும் ஒருபுறத்திலும் ஊரவர்களும் பிள்ளைகளும் மற்றப்புறத்திலுமாக இருபுறத்திலும் இடையீடின்றி அடிக்க, படவேண்டிய மத்தளத்தின் நிலைமையிலுள்ளவர். அவர் சமயாபிமானந் தடித்து நிற்பரேல் அவருடைய கலாசாலைக்குப் பிள்ளைகள் அதிகம் வரா. தொழிலோடு 'யதார்த்தவாதி வெகுசனவிரோதி' என்றாங்கு ஆங்குள்ளார் பலரால் வெறுக்கவும் படுவர். இவற்றையெல்லாம் நமது சமயாபிமானி சிந்தித்தல் நன்றாம். ஆனால் சமயாபிமானி சைவசமயத்திற்கு விரோதமாக இன்மேற் சைவப்பள்ளிக்கூடத்திற்குமாறாக, குறித்த சம்பாஷணையை எழுதினாரல்லரெனபதே எமது அபிப்பிராயம்.

உலகம் பலவிதம்.

—:0:—

ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டு யுகங்களாக ஆண்டு அமரருக்கு இடர்செய்த சூரபன்மனைத் தொலைத்த சுப்பிரமணியா, சிங்கமுகாசுரனுடைய ஆயிரஞ் சிரங்களையும் கொய்த குலிசப்படையைக் கைக்கொண்ட குகனே, வஞ்சக் கிரவுஞ்சகிரி பொடிபடச் செய்த வடிவேலா, அவுணர்குலகாலா, அடியார்களை அஞ்ச வேண்டாமென அபயங் கொடுக்குங் கையையுடைய நல்லூர் ஐயா, பிரணவப் பொருளறியாப் பிரமனைக் குட்டிச் சிறையிட்ட பெருமானே, இதுவும் திருவிளையாட்டா? உன உற்சவம் நிகழும் இக்காட்களில் உன்னைத் தரிசிக்கும்படி வரும் அடியார்கள், உன திருவீதியில் அங்கப்பிரதட்சணஞ் செய்யுந் தொண்டர்கள், பெண்பாலார், சிறு குழந்தைகள், முதியோர், குருடர், செவிடர் ஆகியோர் அபாயமின்றியும் இடைஞ்சலின்றியும் வசதியாகத் தரிசனஞ் செய்யும்படி, சமாதானத்தையும் சனங்களின் க்ஷேமத்தையும் விரும்பும் அரசினர் குறித்த திருவீதியிலும் மிகவும் அணித்தாகவுள்ள சில தெருவீதிகளிலும் வண்டிகள் போக்குவரவு செய்யலாகாதெனப் பிரமாணம் செய்துவிட்டார்களாமே; இந்தப் பிரமாணம் உன் திருவிழாக்காலத்தில் இல்லையாயின் இக்காலத்தில் வரைவின்றி மலிவாக பன்றிகள் ஓடுவதுபோல் ஓடித்திரியும் மோட்டார்ரதத்தினாற் பல அபாயங்களும் உயிர்மோசமும் விளைதல் கூடுமென்றல்லவா எண்ணியிருக்கிறோம். அப்படியில்லையாமே; "இது ஒரு அநியாயமான காரிய" மாமே. இந்த வாக்கும் நால்வேதம் பிறக்கும் வாயாற் பிறந்திருக்கின்றதே; "இப்படித் தடுப்பதற்குக் காரணம் கந்தசுவாமி கோயிலுக்கு அருகிலுள்ள தெருவால் சைவர்கள் தங்கள் சரீரத்தால் உருண்டு உருண்டு பிரதட்சணஞ் செய்கின்றார்கள் என்று சொல்லிவிடுகின்றார்க" ளாமே. உள்வீதியில் உருளக்கூடாதென்று கோயிலதிகாரி சொல்லிவிட்டபடியாற்றான் சைவர்கள் தெருவழியே உருளுகிறார்களாமே. கோயிலதிகாரி உள்வீதியில் உருளவேண்டாமென்று எப்பொழுது சொன்னாரென்பதும் தெரியவில்லையே; இன்றைக்கும் உள்வீதியிலும் புறவீதியிலும் இடையீடின்றி உருளுகின்றார்களே; எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணனுக்கு, தெருவில் உருளும் ஒரு அடியவனை, கும்பிடவந்த குழந்தையை ஒருமோட்டாரதம் நெரித்துக் காயப்படுத்திவிட்டால் இன்றேல் கொன்றுவிட்டாலல்லவா மனமாறியிருக்கும்.

* * *

என்னை யாளுடைய முருகனே, செந்தில் முதல்வனே, மாயோன் மருகனே, உன் உற்சவ காலத்திலே பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் சந்நிதியை யடைந்து உனது கருணைகூர் முகங்களாறிலும் கண்கள் பன்னிரண்டிலுமிருந்து ஊற்றெடுத்துப் பிரவாகிக்குந் திருவருள்வெள்ளப்பிரவாகத்திற் படிந்து திளைத்துப் பேரானந்தமடைய, எத்தனையோ ஏழைகள் அன்னதானம் முதலியன பெற்றுய்ய, எத்தனையோ வியாபாரிமார் இலாபமுற, எத்தனையோ பிராமணர் பல்லாற்றானும் ஊதியமுற, அருட்செல்வம் பொருட்செல்வங்கள் பெருக, அவற்றை யெல்லாம் நெஞ்சிற் காத்து, பிராமணர் சென்மமொன்று உன் உற்சவகாலத்தில் ஆயிரக் கணக்கான சனங்கள் பட்டினி கிடக்கின்றார்களென்று, முருகா உன்மீது அபவாதஞ் சுமத்துகின்றதே; சந்தன மரம் நாகபாம்பைத் தன் குழலில் வைத்திருத்தல்போல, என் அப்பனே, இந்தத் துன்மதிகளை நீயேன் அயலில் வைத்துக் கொண்டிருக்கின்றாய். கிருபாமூர்த்தியே, மௌட்டிகமூர்த்தியின் கூற்றால நின்னடியார் மனம் புண்ணாகின்றதே. சூரபன்மன் உன்னை கேலி வையவும் பாலனென்று அவமதிக்கவும் திருப்புன்முறுவல் பூத்து அச்சூரனுக்குக் கடைக்கண்ணோக்கஞ் செய்து "கோலமா மஞ்ஞை தனனிற் குலவிய குமரன் றன்னைப் பாலனென் றிருந்தேன் அக்காட் பரிசிவை யுணர்ந்தி லேனால்" என்று அவனைச் சொல்லும் வண்ணஞ் செய்து ஈற்றில் அவ்வசுராதிபனைச் சேவலும் மயிலுமாக அடிமைக்கொண்டருளிய உனக்கு இப்பின்மதி கொண்ட பேதை கூற்றும் உவப்பாகவன்றோ இருக்கும். குன்றம் பிளந்த குமரேசா, உனக்கு ரோசமில்லை, விருப்பு வெறுப்பில்லை, நீ உலுத்தன், பூனை குட்டிகளைத் தான் கௌவித் தூக்கிக்கொண்டு வேறு வீட்டிற் சேர்ப்பதுபோல், உன்னை வைவாரையும் நீ வலிதில் ஆட்கொள்ளுங் குணமுடையாய்; ஆனால் உன்னைக் குறைகூறும்போது உனனடியார் மனம் பொறுதவராய், குறைகூறினார்மீது ஆத்திரப்படுகின்றார்களென்பதை நீ திருவுளத்திற் கொள்ள வேண்டாமா? இகலையனையெரித்த இறைவன் நுதல்விழித் தோன்றிய முருகையா நீ இவைகளைப் பாராமுகம்பண்ணலாமா?

* * *

பொதுச் சனங்களுக்குரிய தெருவீதி ஒரு சமய உற்சவத்தின் பொருட்டுச் சில காட்களுக்குத் தடுக்கலாமா; பொலிசார் முற்றிக்கை இடலாமாவென்றும், பட்டின சங்கத்தார் எல்லாருஞ் சைவர்களானதால் இப்படியான பிரமாணத்தை விதித்துவிட்டார் என்று பிராமணோத்தமர் பிதற்றுகின்றார். இந்தப் பிரமாணத்தை நிறைவேற்றுதற்குப் பட்டினசங்கத்தார் மாத்திரமன்றி வடமாகாணத் தலைவருடைய சம்மதமும் வேண்டுமென்பதை அந்தணோத்தமர் அறிந்திலர்போலும். ஒரு சமயத்திற்குச் சார்பாக நின்று இன்னொரு சமயத்திற்கு மாறு செய்வதற்கு அரசினர் உடன்படார்களேயன்றி எச்சமயத்தவரும் தஞ்சமய வழிபாடுகளைச் சமாதானமாகச் செய்தற்கும் சமாதானத்தைக் காத்தற்கும் அரசினரும் பட்டின சங்கத்தவரும் ஆணை புரிவர். மேலும் துவஜாரோகணம், 10-ம் திருவிழா, கார்த்திகைத் திருவிழா, சப்பரத் திருவிழா, தேர், தீர்த்தம் என்னும் இத்திருவிழாக்காலங்களிற்றான் அரசடியிற் சந்திக்கப்பால் வண்டிகள் செல்லக்கூடாவெனப் பொலிசார் தடைசெய்கின்றார்களன்றி ஏனைய காலங்களில் பழஞ்சந்தைத் தெருவீதி வரையில் வண்டிகள் செல்லலாமென்பது இச்சுகுமாரனுக்குத் தெரியாது போலும். கள்வருக்காகவே ஆரம்பத்திற் பொலிசார் நல்லூர் உற்சவகாலத்தில் அழைக்கப்பட்டனரென ஒரு அவிவேகபூரண.....மூர்த்தி உபதேசிக்கின்றதெனவைத்துக்கொள்வோம். அக்காலத்தில் அக்காரணத்தோடு அவரை அழைத்தமை மெய்யேயாகுக. ஆனால் நல்லூர்க் கோயிலிலும் அயலிலும் திருவிழாக்காலங்களிற் சஞ்சரித்த கள்வர்களெல்லாம் பலவாறு ஒறுக்கப்பட்டும் ஆரத்தப்பட்டும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டும் போய்விட்டபடியாலும், இப்பொழுதுள்ள பொலிசாருக்குக் கள்வரைப் பிடித்தற்கு அதிகாரமுண்டென்பது உண்மையாதலாலும் பொலிசார் ஆங்குச் சமூகமாகிச் சமாதானத்தைக் காத்துவருதலால் வரும் இழுக்கு யாதுமில்லையாம். நல்லூர்க்கந்தா, இந்த மௌட்டிகமூர்த்திகட்கு அருள்புரிந்து இவைகளை மேலேற்றுதல் நின்கடன்.

கிரயங்குறைந்த பிரயாணச்சிட்டு.

நல்லூர்க்கந்தசுவாமிகோயிலில் நிகழும் உற்சவங்களுக்குச் செல்வோரின் வசதிக்காகச் செப்டெம்பர்மீ 4உ தொடக்கம் 10உ உட்பட எல்லாவகுப்புக்களுக்கும் யாழ்ப்பாணப் புகைரதஸ்தானத்திலிருந்து 25 மைல் தூரத்திற்கு மேற்பட்டிருக்கும் எல்லாப்புகைரதஸ்தானங்களிலும் கிரயங்குறைந்த புகைரதப்பிரயாணச்சிட்டுப் புகைரதப்பகுதியாரால உதவப்படும். செப்டெம்பர்மீ 15உ வரைக்கும் இந்தப்பிரயாணச்சிட்டுக்களை கொண்டு தங்கள் இடங்களுக்குத் திரும்பிச்செல்லலாம். 25 மைல் தூரத்திற்கு மேற்படவிருக்கும் எந்தப் புகைரதஸ்தானத்திலிருந்தும் யாழ்ப்பாணப்புகைரதஸ்தானத்திற்கு மாத்திரமே கிரயங்குறைந்த பிரயாணச்சிட்டு உதவப்படும்.

விவாகம்.

வண்ணார்பண்ணை வெள்ளாந்தெரு அங்குசபாசப் பிள்ளையார்கோவில் அர்ச்சகரும் பிரபல விஷகடி வைத்தியருமாகிய சிங்கப்பூரையர் என வழங்கும் பிரமஸ்ரீ இராமசாமி ஐயரின் ஏகபுத்திரன் ஸ்ரீ வைத்தீசுவர ஐயருக்கும் தெல்லிப்பழையைச் சேர்ந்த பன்னாலை ஸ்ரீ முத்திரிஷி குமாரசுவாமிக் குருக்களின் புத்திரி ஸ்ரீமதி கௌரி அம்மாளுக்கும் சென்ற சனிக்கிழமை யிரவு 12 மணிக்குமேல் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் மணமகள் கிருகத்திற்றனே விவாகம் விதிப்படி சிறப்பாக நிறைவேறியது. சுற்றமித்திரர்கட்கு விவாக விஞ்ஞாபனம் விடுத்து அதிக ஆடம்பரத்தோடு விவாகம் நடக்கவில்லையாயினும் அச்சமையத்திற் பல சுற்றமித்திரர்கள் ஆங்குச் சமூகமாயிருந்தனர். தம்பதிகள் அட்ட ஐசுவரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும்வண்ணம் அங்குசபாசப் பிள்ளையார் திருவருள் பாலிப்பாராக.

அரசிறைச் செலவும் புகைரதப்பகுதிச் செலவும்.

1928-ம் ஆண்டு அக்டோபர்மீ 1உ தொடக்கம் 1929-ம் ஆண்டு செப்டெம்பர்மீ 30உ வரையிலுமுள்ள அடுத்த வருட அரசாங்க செலவிற்காக அரசிறை வருமானத்திலிருந்து 13 53·90,397 ரூபாவும், புகைரதப்பகுதிச் செலவிற்காகப் புகைரதப் பகுதி வருவாயிலிருந்து 3,15,00,000 ரூபாவும் கொடுக்கும்படி அநுமதிக்கப்பட்டிருக்கின்றன.

ரேகுப் பகுதியில் சேர விரும்புவோர்க்குரிய பரீட்சை.

ரேகுப்பகுதியில் உத்தியோகம் வகிக்க விரும்புவோர்க்குரிய பரீட்சை யொன்று கூடிய சீக்கிரத்தில் நடைபெறவிருக்கின்றது. முழு விபரங்களும் 1928-ம் ஆண்டு ஆகஸ்டுமீ 31-ந் திகதியும், செப்டெம்பர் மாசம் 7-ந் திகதியும் வெளிவரும் 'கஜட்' பத்திரிகையில் காணலாகும். அல்லாமலும் ரேகு அதிகாரிக்கெழுதி அறிந்துங் கொள்ளலாம். விண்ணப்பங்கள் அதற்கென அச்சடிக்கப்பட்டு ரேகு அதிகாரியிடம் இருக்கும் மாதிரிப் பத்திரங்களில் எழுதியனுப்புதல் வேண்டும். அவ்விண்ணப்பங்கள் 1928-ம் ஆண்டு செப்டெம்பர்மீ 25உ பகல் 2 மணிக்குமுன் ரேகு அதிகாரிக்குச்சேரத்தக்கதாக அனுப்பப்படல்வேண்டும்.

தபால் உதவி அதிகாரிகளாயிருத்தற்கு 11 பேர் தேவை.

கொழும்பு, அநுராதபுரம், யாழ்ப்பாணம், கண்டி, குருநாக்கல், மாத்தளை, மாத்துறை, நீர்கொழும்பு, நுவரெலியா, இரத்தினபுரி என்னும் இந்த இடங்களிற் கொஞ்சக் காலத்திற்குத் தபால் உதவி அதிகாரிகளாக 11 பேர் நியமிக்கப்படுவார்கள். விண்ணப்பமனுப்புவோர் அந்தந்த இடங்களில் வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும். E. S. L. C. என்னும் பரீட்சையிலாவது அல்லது வேறு உயர்ந்த பரீட்சையிலாவது விண்ணப்பம் அனுப்புவோர் சித்தியெய்தியிருத்தல் வேண்டும். இத்தமீ 15-ம் திகதிக்கு முன் விண்ணப்பங்கள் தபாற்கந்தோர் மேலதிகாரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

திரிகோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில்.

இக்கோயிலில் இந்த ஆவணிமீ ௧௫உ (30—8—28) வியாழக்கிழமை துவஜாரோகணமாகி மகோற்சவஞ் சிறப்பாக நடக்கின்றது. ஷெ கோயிலாதீனபூசகர் பிரமஸ்ரீ இ. கு. பூர்ணானந்த் தேசுவரக் குருக்களவர்களே வழக்கம்போல உற்சவாசார்யராக இருந்து செவ்வனே நடப்பிக்கின்றார்கள். இந்த ஆவணிமீ ௨௮உ (12—9—28) புதன்கிழமை ரதோற்சவமும் அடுத்தநாள் தீர்த்தோற்சவமும் நிகழும்.

மிருகத்திற்கு நிஷ்டூரஞ் செய்தமைக்கு அபராதம்.

ஹற்றன் பொலிஸ்கோட்டில், காதர் சாயபு என்னும் இறைச்சிக்காரனின் வேலைக்காரனான பீர்முகம்மது என்பவன், ஒரு எருது காலநோய் காரணமாக முடவுப்பொழுது அதன் வாலை முறுக்கியும் அதற்குக் குடையால் குத்தியும் நிஷ்டூரஞ் செய்தானெனக் குற்றஞ் சாட்டப்பட்டான். அவனுக்கு ரூபா 40 அபராதம் விதிக்கப்பட்டது.

தபாற்கந்தோர்களின் மேலதிகாரி.

இதுகாறும் தபாலை மட்டுப்படுத்தும் பகுதியில் மேலதிகாரியாயிருந்தவராகிய மிஸ்டர் H. A. பேடின் அவர்கள் 8 மாச விடுதலைபெற்று இங்கிலாந்திற்குச் செல்வார். முன்னர் ஷெ பேடின் அவர்களே நவம்பர்மீ 1உ தொடக்கம் தபாற்கந்தோர் மேலதிகாரியாகக் கடமைபார்க்க நியமிக்கப்பட்டிருந்தனர் ஆனால் அவர் விடுதலை பெற்றுச் செல்லுகிறபடியால் இதுகாறும் பிரதித் தபாற்கந்தோர் அதிகாரியாகக் கடமை பார்த்த மிஸ்டர் W. J. பிறூற் அவர்களே இன்னும் எட்டு மாசங்களுக்கு அக்கடமையைப் பார்ப்பார். மிஸ்டர் H. A. பேடின் அவர்கள் விடுதலை பெற்று இங்கிலாந்தில் இருக்கும் பொழுது லண்டனிலுள்ள பெரிய தபாற்கந்தோருக்குச் சென்று அங்கே அநுசரிக்கும் புதிய முறைகளைக் கற்றுவருவாரென எண்ணப்படுகிறது.

அவுஸ்திரேலியாவில் வேலை கிடையாது.

சென்ற சனிக்கிழமை காலை, கொழும்புப் பொலிஸ்கோட்டில் அவுஸ்திரேலியாவிலுள்ள பிறவுன் என்னுமொருவன் அவுஸ்திரேலியாவிலிருந்து கொழும்புக்கு வந்த 'ஹொரப்சன்ஸ் பே'' என்னுங் கப்பலிற் களவாக மறைந்திருந்து பிரயாணஞ் செய்தானெனக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தான். அவன் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டபின், அவுஸ்திரேலியாவில் தனக்கு வேலை கிடைக்கவில்லையென்றும், அங்கே பெறும் வேதனம் மிகக் குறைவாயிருக்கிறதென்றும், தான் 5 வருடகாலமாய் ஒரு கமத்தில் வேலை செய்தும் ஜீவனார்த்தத்திற்குப் போதிய வேதனம் தனக்குக் கிடைக்கவில்லையென்றும், வேறெங்காவது வேலை அகப்படுத்திக்கொள்ள முயற்சித்தும், அநுகூலமடையவில்லையென்றும், கடைசியாக வேறொரு தேசஞ் செல்லத் தீர்மானித்ததாகவும் நீதிபதிக்குக் கூறினன். அவன் ஒருமாத வேலையில்லாச் சிறை விதிக்கப்பெற்றான். சிறையின் காலஎல்லை முடிந்தவுடன் அவனது பெற்றோர் வசிக்குந் தேசமாகிய அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பப்படுவான்.

அறிவித்தல்.

யாழ்ப்பாணப் புகைரதஸ்தானப் பண்டகசாலை கேற்றுக்கும்; உத்தியோகஸ்தர் கட்டிடத்துக்கு எதிராய்ச் செல்லும் ராசாவின் தோட்டத்து றோடுக்கு இடையே செல்வதும்; மானிப்பாய்ப் பாதையோடு இணைக்கப்பட்டிருப்பதுமான ஊடேக்கா தெருவில் இருக்கும் பத்தேகால் (10¼) நிலப்பரப்புள்ள ஒரு நேர்த்தியான துண்டுக் காணியும், அதற்குள் இருக்கும் சிறிய வீடொன்றும், கிணறும் தென்னை மரங்களும், மாமரங்களும், மற்றும் புரோசனங்களும் சேர்ந்ததுமான மேற்குறித்த காணி விற்பனைக்குத் தயாராயிருப்பதால் கிரயமாய் வாங்க விரும்புவோர் தங்கள் டெண்டர்ப் (Tender) பத்திரங்களை எதிராய் வரும் புரட்டாதிமீ 30உக்கு முன் அனுப்புமாறு கேட்கப்படுகின்றனர்.

மேற்குறித்த இடத்தை யாழ்ப்பாணப் புகைரதஸ்தான மேற்பாலத்தால் நடந்தால் ஒரு நிமிஷத்தால் சேரலாம்.

டெண்டர் பத்திரங்கள் நேரே எனக்குச் சேர்வதற்குப் பதிவுசெய்த உறையிலிட்டு அடியிற் காணும் எனது விலாசத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

எனது விலாசம், S. Armstrong,
Dorr s Cottage,
B [illegible].

(M s 1291.) 1928-ம் ௵ ஆவணிமீ 14உ.

அறிய விரும்புகிறேன்.

நான் யாழ்ப்பாணக் கிராமக்கோட்டு நீதாசனர்களிடம் மிகத் தாழ்மையாய்க் கேட்பது.

ஐயன்மீர்!!

குடி நெருங்கியுள்ள கிராமங்களில் ஒருவர் வியாபாரநோக்கமாயோ தம் சுய உபயோகத்திற்காகவோ சுண்ணாம்புச் சூளை வைக்கிறதானால், அவர் அனுசரிக்கவேண்டிய பிரமாணங்களென்னை? என்பதைத் தங்களில் யாராவது இந்துசாதனவாயிலாகவோ யாழ்ப்பாணத்திலுள்ள வேறு தமிழ்ப் பத்திரங்கள் மூலமாகவோ விபரமாய் அறிவிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
S P S
திருநெல்வேலி.

தற்காலப் பண்டிதர்களின் கதியென்னே!

நம் யாழ்ப்பாணநாட்டின்கண்ணே இன்றைக்குச் சில வருடகாலமாகத் தமிழ்க்கல்வி விருத்தியடைந்து வருகின்றதென்பது பலர் கொள்கை. எவ்விதம் விருத்தியடைகின்றதோவெனின் 12 வயசுக்குட்பட்ட பிள்ளைகள் யாவரும் கல்விகற்க வேண்டுமென்னும் அரசாட்சியார் சட்டாயப் பிரமாணத்தினாலும், யா, ஆ, தி, பா, வி, சங்கத்தினாலுமே யெனச் சொல்வர். இதில் சட்டாயப் பிரமாணமென்பது உண்மையேயெனினும், பாடசாலைகளில் கல்வி கற்பிப்பது போலித் தோற்றமேயாம் அஃதெங்ஙனமெனின்? 5-ம் வகுப்பு மாணவனொருவனுக்கு வருடம் முழுவதும் இலக்கிய விஷயமாகப் படிப்பிப்பது 20 செய்யுளேயாம் இனி அதனைப் படிப்பிக்கும் உபாத்தியாயர் பெரும்பாலும் 8-ம் வகுப்புக்குட் சித்தி பெற்றவராகவே யிருப்பர். 5-ம் வகுப்பு மாணவன் 20 செய்யுள் படிப்பதாயின் 8-ம் வகுப்புக்குட் சித்திபெற்ற உபாத்தியாயரின் இலக்கிய அறிவைச் சொல்லவும் வேண்டுமோ? இனி மேற்படி செய்யுள்களில் அசை, சீர், தளை, அடி, தொடை, மோனை என்று சொல்லப்படுகிற செய்யுளுறுப்புகளுள், ஏதாவதொன்று குறைந்து வந்ததாக வைத்துக்கொள்வோம். அதனை ஷெ உபாத்தியாயர் அறிந்து திருத்திக்கொள்வாரா? இல்லையே. வெட்கம்! வெட்கம்!!

இனிப் பாடசாலையைப் பரீட்சிக்கும் வித்தியாதரிசிமாரோவெனின், உபாத்தியாயர்களின் உடுப்புகளைக் கவனிப்பதளவு பிள்ளைகளின் கல்வியைப் பற்றிக் கவனிக்கின்றார்களில்லை. அப்படிக் கவனித்தாலும் நம் தமிழாகும் இலக்கண இலக்கியங்களைப்பற்றிச் அதிகம் கவனிக்கிறார்களில்லை. அதுமாத்திரமன்று, பாடசாலைகளில் இலக்கணமென்னும் பாடம் வேண்டாமென்கின்றனர். இவர்கள் இவ்வாறு கூறி ஒழிக்கின் தமிழ் விருத்தியாவதெப்படி?

இரண்டாவதான சங்கமோவெனின், பாடங்களைக் குறித்து அதில் சித்திபெற்றோருக்குத் தராதரப்பத்திரத்தைக் கொடுக்கின்றது. அவ்வாறு இதுவரையில் சித்தியடைந்து பத்திரம் பெற்றோர் சிலரேயாவர். அவரும் தமிழ் உறுதி எழுத்தாளராக விரும்பும் நியாயவாதிகளும், ஆசிரியகலாசாலையில் பிரவேசிக்க வேறு தகுதிப்பத்திரம் இல்லாதவர்களுமேயாம். மற்றதிகம்பேர் பரீட்சைக்குப் போய்ச் சித்தியடைந்து பத்திரம் பெறுமைக்குக் காரணம் ஷெ பத்திரத்தாலாம்பயன் யாதுமில்லையென்னும் எண்ணமன்றி வேறில்லையாம். இவ்வெண்ணத்தையிட்டு ஷெ சங்கத்தாராகுதல, அச்சங்கத்தில் சித்திபெற்ற பண்டிதர்களாகுதல், சட்டநிருபண அங்கத்தவராகுதல் கவனித்தார்களில்லை. ஷெ பரீட்சைக்குப் போகும் பண்டிதர்கள், தொல்காப்பியம் முதலாம் இலக்கணநூல்களும சங்க இலக்கியங்களும கற்றுச் சித்தியடைந்ததலாம் பயனை ஆராயுமிடத்து யாதுமில்லையாம். இவர்கள் எவராவது நம் பாடசாலைகளில் உபாத்தியாயர்வேலை கேட்டால் அப்பாடசாலை மானேஜர்மார் உமக்குத் தகுதிப்பத்திரம் இருக்கிறதா? எனக் கேட்கின்றனர். இல்லையாயின் எடுக்கிறாரில்லை. இனி அரசாட்சியார் இவர்களைத் தராதரப் பத்திரம் இல்லாதவர்களாகவே கவனிக்கின்றனர். அவ்வாறாயின் ஷெ சங்கத்தார், தேசாதிபதியவர்கள் கைச்சாத்துடனும், வித்தியாகர்த்தர் கைச்சாத்துடனும் பத்திரம் கொடுப்பதேனோ? அவ்வாறு பிரயோசனமில்லாதிருப்ப ஷெ பண்டிதர்களும் அப்பத்திரத்தைக் காற்றிற் பறக்கவிடாது பத்திரமாய் வாங்கி வைத்திருக்கின்றார்களே! இப்பண்டிதர்கள் 2-ம் தராதரப்பத்திரம் பெற்ற உபாத்தியாயர்களிலும் பதின்மடங்கு இலக்கண இலக்கிய அறிவுடையவர்கள் என்பதை இவர்கள் அறியக்கடவர்.

சட்டநிரூபண அங்கத்தவர்களே!
வித்தியாபகுதி அங்கத்தவர்களே!!

நீவிர் உண்மையில் தமிழ்க்கல்வியை விர்த்தி செய்பவர்களாயிருப்பின் ஒவ்வோர் மத்திய பாடசாலைகளிலும் குறைந்தது ஓர் பண்டிதராகுதல் இருக்கவேண்டும். அத்துடன் அவர்கள் பத்திரம் உள்ளவர்களாகவே கவனிக்கப்படல் வேண்டும். அதுவன்றி அவர்கட்கு வேதன விஷயமும் ஒழுங்குசெய்தல்வேண்டும். இப்பிரமாணங்களைக் கட்டாயப்படுத்திச்செய்துவரின் தமிழ்க்கல்வி விருத்தியாகுமென்பதில் ஐயமின்று. அஃதின்றி இப்போது இருப்பது போல் இருப்பின் யாது பிரயோசனமுமின்றாம்.

இப்படிக்கு,
ஆ. சிவபாதம்.

புகைரதஸ்தான வாயில்காப்போனின் செயல்.

இற்றைக்குச் சில தினங்களுக்குமுன் யானுமெனதில்லாளரும் யாழ்ப்பாணப் புகைவண்டி நிலையத்தில் வந்திறங்கினோம். நாங்கள் இரு இரும்புப்பெட்டிகளையும், இருமரப் பெட்டிகளையும் கொண்டுவந்தோம். நான்குபெட்டிகளையும், கண்ணுற்ற இராமசாமி, என்னும் வாயில்காப்போன்' இவைகள் குறிக்கப்பட்ட நிறைக்கு மேலதிகமாகக் காணப்படுகின்றன, இவைகளை நிறுக்கவேண்டும், அங்கேவை' என்று எங்கள் பெட்டிகளைக்கொண்டு வந்த ஏவலாளர்க்குச் சினந்துரைத்தனன். அப்பொழுதுயான், 'நீ பெட்டிகளை நிறுக்கவேண்டுமாயின் வைத்து நிறுத்துக்கொள், ஆயினும் இப்போது எங்கள் பிரயாணச் சீட்டைப் (Tickets) பெற்றுக்கொண்டு எங்களைமாத்திரம் வெளியே போகவிடு, எங்கள் பெட்டிகளைவிட்டு நாங்கள் ஓடிப்போக மாட்டோம், அன்றியும், எங்களை ஏற்றிச்செல்லவந்த 'காரும்' (Car [illegible]) மிகவுங் கிட்டத்தான் நிற்கின்றது. பெட்டிகள் குறிக்கப்பட்ட நிறைக்கு மேலாகவிருப்பின் அதற்குரிய பணத்தைக் கொடுத்துச் செல்வோம் என்றேன். அதற்கு இராமசாமி 'அப்படிச்செய்யமுடியாது, நிறுத்துக்காசைக்கட்டிப்போட்டுப்போ' என்றான். அதற்கு நான், 'ஆ! நான், வெளியூரிலே எத்தனையோ போட்டர்மாரைக்கண்டேன், ஆயின் உன்னைப்போல ஒருவரையும் காணவில்லை. வெளியூரிலே 'ஸ்டேசன்களில' (Station நிலயங்கள்) உள்ள சிங்களசாதியாய போட்டர்மார் கூட எனக்கு வேண்டிய உதவியும் நிறைந்த மரியாதையும் செய்வார்கள். ஆனால் யாழ்ப்பாணத்திலே பிறந்த எனக்கு அதுவும் யாழ்ப்பாணத்துத்தலைமை ஸ்டேசனில இவ்வித கொடுங்கட்டுப்பாடு நிகழ்கின்றது, என்றேன். அதற்கு இராமசாமி (I am doing the duty, weigh the e, pay the excess and go) நான் என் கடமையைச் செலுத்துகின்றேன் இவைகளை நிறுத்துக் காசைக்கட்டிப்போ' என்றனன். உடனே நான் அங்குள்ள தலைமை உத்தியோகத்தருக்கு (Station Master) நிகழ்ந்தவற்றைச் சொன்னேன். அவர் உடனே வெளிப்போந்து கதவைத் திறந்து (Gate) எனதில்லாளைக் காரில் (Car) ஏற்றியிருக்கச்செய்தனர். பின் அவர் பாசல் இறாக்கிடம்போய்ச் சொல்லும்படி சொல்லிவிட்டுத் தனது உத்தியோகத்திற்குச் சென்றனர். இதற்கிடையில் இராமசாமிப் போட்டருக்காக நயந்துபேசும் இன்னொரு போட்டர் ஓடிவந்து என் காதிற்குள் குசுகுசவென்று 'ஐம்பதுசதம் கையிற்குள் பொத்திவிடும் அவன் விட்டுவிடுவான். நிறுக்கப்போகில் கனகாசு வரும், என்றான். நான் அதற்கு, கனகாசுவந்தால் வரட்டுக்கும் (I am doing the duty) என் கடமையைச் செய்கின்றேன், என்றவன் பின் அரசாங்கத்தாரை (Government) ஏய்த்துக் கைக்கூலி வாங்குவதெப்படி'? என்று சொல்லிவிட்டுப் பாசலிறாக்கிடம் சென்றேன். செல்லும்போது அவரும் ஓர் யாழ்ப்பாணத்தவராயிருக்கக்கண்டு அகமகிழ்ந்துகொண்டு அவருடைய அறையின் உள்ளே சென்று நிகழ்ந்தவற்றைச் சொல்லிவிட்டு இராமசாமி என்றவன் எந்த ஊர் என வினவினேன். அதற்கவர் அவன் ஒரு விதமானவன் அவன் இந்தியாவிலுள்ள திருநெல்வேலியான் எனப்பகர்ந்துவிட்டு என் பெட்டிகளை நிறுத்து மேலதிகமாக வந்த (90) தொண்ணூறு சதத்தையும் பெற்றுக்கொண்டு பெட்டிகளைத் தூக்குப்படி கட்டளையிட்டனர். யான் இருவரையழைத்து வந்து பெட்டிகளைத் தூக்கும்படி சொல்ல, பின்னும் அத்துடன் இராமசாமி, 'ஓ! கொஞ்சம் நில், டிக்கெற் (Ticket) நம்பர் பார்த்தெழுத வேணும்' என்று தடுத்துவிட்டனன். உடனே யான் சினங்கொண்டு ஒன்றும்பேசாது பின்பும் தலைமையுத்தியோகத்தருக்கு(Station Master)ச் சொன்னேன். உடனே அவரும் பெருஞ்சினத்துடன் என் பெட்டிகள் இருக்கும் இடத்தையடைந்து அங்குள்ள இருபோட்டர்மாரை (Porters)க் கூப்பிட்டு என் பெட்டிகளையெல்லாம் காரில் (Car) ஏற்றுவித்துவிட்டனர்.

நான் வெளிப்போகும்போது இராமசாமிப் போட்டரைப் பார்த்துப் 'போட்டரே! உன்னுடைய கறுப்புக்காற்சட்டையின் அதிகாரம் இவ்வளவுதானோ? நல்லது நீ இரு, நான் போய் வருகிறேன்' என்றுசொல்லிவிட்டுக் (Car)க் ஏறிக்கொண்டு என் வீடுசேர்ந்தேன்.

எங்கள் தாய்நாடாகிய இந்தியாவிற் பிறந்த ஒருவன் தன் அயல்நாடாகிய இலங்கை, அதுவும் தமிழ்மொழியினங்கும் யாழ்ப்பாணத்திற் பிறந்த ஒருவன்மீது காட்டிய அன்பு இத்தகையதென்பதை இதனைப்படிப்போர் சிறிது உற்று நோக்குவாராக.

இங்ஙனம்,
ஓர்பிரயாணி.

[மதவாச்சிபோன்ற சில அந்தரமான புகைரதஸ்தானங்களிற் கடமைபார்க்காது யாழ்ப்பாணப் புகைரதஸ்தானத்தில் இராமசாமி வாயில்காப்போனாய் நிற்பது புகைரதப் பிரயாணிகளின் அதிஷ்டம் போலும்.—பத்திரிகாசிரியர்.]

சைவ அநாதப் பிள்ளைகள் சாலையும் மாணவர் இல்லமும்.

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

அநாதப்பிள்ளைகள் எல்லோரும், தமிழ் ஐந்தாந்தரம் அல்லது அதற்குமேற்பட்ட வகுப்புக்களிற் சித்தியடைந்த ஏனைய மாணவர்களும் இச்சாலையிற் சேரலாம்.

இப்பிள்ளைகள் திருநெல்வேலி முத்துத்தம்பிவித்தியாசாலையிற் கல்வி கற்பிக்கப்படுவர்.

பிரதான நோக்கம்.

1. தராதரம் பெற்ற உபாத்தியாயராக்கல்.
2. கோப்பாய் அரசினர் ஆசிரியகலாசாலைப் பிரவேசப்பரீட்சைக்குத் தகுதி உடையவராக்கல்.
3. பிரவேசபண்டித, பாலபண்டித, பண்டிதபரீட்சைகளுக்குத் தகுதியுடையவராக்கல்.
4. கமத்தொழில் நெசவுத்தொழில் முதலிய கைத்தொழில்களிற்தேர்ச்சியுடையவராக்கல்.

அநாதப்பிள்ளைகளுக்கு வேதனமின்றி உணவளிக்கப்படும். ஏனையோர் விடுதிச்செலவில் ஓர் பகுதியாவது கொடுத்தல்வேண்டும்.

S. சபாபதிப்பிள்ளை. திருநெல்வேலி,
(M 69) க. இராசரத்தினம், சைவவித்தியாவிருத்திச் சங்கம்

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டக்கோவைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் வண்ணைசந்தை மா. கு. தெண்டாயுதபாணி என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

1927-ம் ஆண்டு ஆகஸ்டுமீ

இல	உ	ரு	ச.	
D 91	3	60		வ. நாகலிங்கம் கொட்டடி பட்டணக்காப்பு 2
106	3	11		செ. ஆரோக்கியம் நாவாந்துறை மோதிரம் 1
225	6	60		ம. செசேறியா கரையூர் பட்டணக்காப்பு 2
226	6	10		ம. செசேறியா கரையூர் குப்பிக்கடுக்கன் 2, நாகபடம் 2
260	7	15		ம. செசேறியா கரையூர் வெள்ளிச்சங்கிலி 4, கவுத்தோர் 1, வாளி 2
308	8	10		த. அந்தோனி நாவாந்துறை குப்பி 2 நாகபடம் 2 தட்டுமணி 1
362	10	14		மு. முகம்மது அப்துல்றகுமான் சோனகதெரு வெள்ளி பாதசரம் 2
367	10	40		பி. சந்தியோ கரையூர் சவடி அட்டியல் 1
382	11	50		க. செயினுமுகம்மது சோனகதெரு ஐந்துபட்டு மணிக்கோர்வை 1
383	11	180		க. செயினுமுகம்மது ,, ஒன்பதுபட்டு மணிக்கோர்வை 1
397	11	10		தி. இராசதுரை நாவாந்துறை சிறு காப்பு 2
515	15	6		ப. இன்னேசம் நாவாந்துறை கவுத்தோர் 1
527	15	10		வே. நாகன் வட்டுக்கோட்டை மோதிரம் 2
581	17	7		க. சின்னத்தம்பி கொட்டடி கல் மோதிரம் 1
D585	17	40		தொம்மை இராசம்மா நாவாந்துறை அட்டியல் 1
593	17	10		அ. மரியான் கரையூர் கல் தோடு 2
671	19	20		நா. கந்தன் கோப்பாய் பொன் அட்டியல் 1
708	20	10	03	மா. பரராசசிங்கம் புங்குடுதீவு மோதிரம் 1
728	21	8		ம. மரிலாமணி பொலிஸ்லைன் மோதிரம் 1
738	21	6	12	மீ. அப்துல்றகுமான் சோனகதெரு வளையல் 8
788	22	10		க. சுப்பிரமணியம் கொழும்புத்துறை தென்னம்பூச் சவடி 1
808	23	18		கா. இராமலிங்கம் ஆனைக்கோட்டை குப்பி 4 வாளி 2
836	24	85		வி. சரவணமுத்து நீராவியடி செட்டிக்காப்பு 2
817	24	7	50	வே. வயித்தலிங்கம் வெள்ளாந்தெரு கல் மோதிரம் 1
848	24	65	03	செ. யக்கோபிள்ளை மண்டைதீவு பீலிக்காப்பு 2, தோடு 2
925	26	52		ஆ. முத்துலிங்கம் கைதடி பதக்கத்துடன் அட்டியல் 1
1074	31	120		வா. சமூ இஸ்மையில் சோனகதெரு எழுபட்டு மணி 1 சவடி 2

விற்பனவு:— 1928-ம் ஆண்டு செப்டெம்பர்மீ 25உ 10 மணி தொடக்கம் எடுபட்டவை நீக்கலாக மிகுதி மேற்படி கடைத் திண்ணையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

கி. ஐயாப்பிள்ளை உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்.

(Mis 1289.)

புத்திரன் பிறந்தவுடன் பிதாச் செய்யுங் கருமம்.

——:——

நிலத்தினிற்பிள்ளைபிறந்தது
முதசாசரிவாடித்
திலகத்துடன்செஞ்சாலிபொன்பாற்
பசுவுஞ்செழுநிலனும்
நலத்துயர்நான்மறையோர்க்கித்து
சற்கோணிப்பத்ரத்தக்
குலத்தரவோருடன்பிள்ளையைக்
காணக்குறித்தனரே.

இ-ள். புத்திரன் பூமியிற் சென்னமானவுடனே பிதாவானவன் வடக்குத் திக்கிலுள்ள குளம் முதலியவற்றில் ஸ்நானஞ் செய்துகொண்டு, எள்ளும், நெல்லும், பொன்னும், பாற்பசுவும், நல்லபூமியும், வஸ்திரமும் சற்பிராமணருக்குத் தானம்பண்ணி, தற்காலத்திலுள்ள சுபமுகூர்த்தத்தில் சாதகன்மஞ் செய்து, தன குலத்திலுள்ள பெரியோர்களுடனே புத்திர தரிசனஞ் செய்கவென்பதாம். எனவே தொப்புட்கொடி அறுக்க முன்னரே தான முதலியவற்றைச் செய்து சாதகருமஞ்செய்க. தொப்புட்கொடி அறுக்கும்வரையும் சனனசௌசம் கமலபத்திரோதகம் போலிருக்கும் பிதாவுக்கு அன்று வேறு ஆசௌசமிருந்தாலும் அத்தக்காலம் வரையும் ஆசௌசமில்லையாம். குழந்தைபிறந்த அந்த இடத்திற்றானே அக்கினி தேவர்களும், பிதிர்களும் வருவார்களாதலின் அத்தருணம் வரையில் புண்ணியகாலமாயும் பூசைக்கு உகந்த தருதியான காலமுமாக விருக்குமென்பதையுமறிக.

சாதகன்மமாவது:— அஸ்திர மந்திரத்தினால் ஆறு ஓமஞ்செய்து வாமதேவ மந்திரத்தினாற் புத்திரன் முகத்தை எதிராகப்பார்த்துப் பஞ்சப்பிரம மந்திரத்தை யுச்சரித்து "என்னுடைய ஒவ்வொரு அங்கத்திலிருந்தும் நீ பிறந்திருக்கின்றாய், எனது இருதயத்திலிருந்தும் அதிகமாக உண்டாயிருக்கின்றாய், புத்திரன் என்ற பெயருள்ள நானாகவே நீயிருக்கின்றாய், நூறு வருஷகாலம் சீவித்திருக்கக் கடவை, எனது உயிர் உன்னுளிருப்பது, சந்ததி உன்னாற் குன்றாமல் இருக்கவேண்டும், ஆதலால் எனது புத்திரனே நூறுவருஷகாலம் சீவித்திருக்கக் கடவை என்று சொல்லி உச்சியைமோந்து, தற்புருஷ மந்திரத்தை வலது காதில் ஓதல் வேண்டும். பின் பொன், நெய், தேன் இவற்றை யொன்றாய்க் குழப்பி மந்திரத்தோடு குழந்தையின் நாவில் தடவவேண்டும். தற்காலமுள்ள சிலர் இருப்பைவிளக்கெண்ணெயிற் குழைத்து நாவிலே தடவி விடுகின்றனர். இவை இரண்டும் சனியின் அம்சமாதலால் அக்குழந்தையைத் தன் வாழ்நாளில் தரித்திரத்துடன் துன்பமுறச்செய்துவிடுகின்றனர். இம்மட்டோடு மில்லாது சிசுவுக்குத் தூர்த்தேவதை யணுகாதென்னும் நம்பிக்கையுடன் காலில் இரும்புக் காப்புகளைத் தரித்துவிடுகின்றனர். பொன்னினாற் செய்த ஐம்படையென்னும் சங்கு, சக்கரம் கதை, கட்கம், கோதண்டங்களை அணியச் செய்தல் வேண்டும். பிள்ளைப் பருவத்திற் காவற் கடவுளாகிய விஷ்ணுவின் பஞ்சாயுத வடிவாகச் செய்த பஞ்சாயுத மணியைப் பூட்டுதல் வேண்டும். திருவிளையாடற் புராணத்தில் மாமனாகவந்து வழக்குரைத்த படலத்திலே "ஐம்படை மார்பில் காணேன்" என்றதும் அக்கருத்தாகவே யிருக்கிறது. சாதகருமம் என்பது பிறப்புச் சடங்காகும். இங்கே சாதகம் எழுதுவதென்று பொருள் கொள்ளற்க.

குழந்தை பிறந்த மனையில் அச்சூதகமனைக்கு அபிமான தேவதையாகிய "ஜன்மதை" என்னும் தெய்வம் இருக்கின்றது. அதற்கு மூன்றாநாள் பூசைசெய்தல் வேண்டும். பின்பு ஆறாவது பத்தாவது நாட்களில் இராக்காலத்திலே ஆடல்பாடல் வாத்தியங்களுடன் பெண்களும் ஆயுதங்களைத் தரித்த ஆடவர்களும் நித்திரையை நீக்கிக்காத்து அத்தெய்வத்திற்குப் பலிகொடுத்தல் வேண்டும்.

மூன்றாம் நாள் "ஜன்மதை" தேவதைக்குச் செய்யும் பூசையைத்தான் தற்காலத்தில் மூன்றாந் தீட்டுக்கழித்தல் எனச் செய்யும் சடங்காகும். சிசுபிறந்த பதினொராநாள் சுபமுகூர்த்தத்தில் சாதகம் கணித்துக்கொள்க.

இந்த நாட்களுள் குழந்தைக்கு கிரந்தி முறைக்கு வயிற்றால் போகாதிருந்தால், கோரோசனை, வெண்காரம், வெங்காரம், அதிமதுரம், திற்பலி, கராம்பு, வகைக்குக்களஞ்ச (௧) சிவதைவேர், கடுகுரோகணி, வகைக்கு களஞ்சு (௨) இவைகளைச் சூர்ணித்து வெற்றிலைச் சாற்றிலரைத்துக் கடுகுப் பிரமாணம் முலைப்பாலில் கொடுக்கச் சுகமுண்டாம். அனுபவப்பட்டது.

பிரசவ வீட்டில் வேப்பெண்ணெய் விளக்கு எரியவேண்டும். அத்துடன் வேப்பம் வித்துப் புகையிடுவதும் உத்தமோத்தமம்.

ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்,
அம்மன்கோயில்,
சுதுமலை.

இலக்கம் 8.

அரசாங்கவைத்திய சுகாதாரப்பகுதி வெளியீடு.

அசுத்த உணவினுல் விளையுந் தீமைகள்

(முற்றொடர்.)

உணவுப் பொருட்களி லிருக்கும் அழுக்குகள் இரண்டுவகையாய் உண்டாகின்றன. ஒன்று, இயல்பாக அமைந்திருக்கும் தன்மை. மற்றது, செயற்கையினு லுண்டாகுந் தன்மை. மீன், இறைச்சி, மாமிசம் முதலியவைகளில் காணப்படும் நாடாப் புழுக்கள் போன்ற சில கிருமிக் கூட்டங்களும் நீர்முள்ளி (Foot and mouth disease) "அன்திறாக்ஸ்" (Anthrax) என்னும் கோமாரி, க்ஷயரோகம் முதலிய வியாதிகளால் பீடிக்கப்பட்ட மிருகங்களின் இறைச்சி பழுதுள்ளதாயிருத்தலும் நீர்முள்ளி க்ஷயரோகம் மடிவீக்கம் முதலிய நோயுள்ள பசுக்களின் பால் கெட்டுப்போயிருத்தலும் ஆகிய இம்மூன்றும் உணவுப்பொருட்களில் இயல்பாக அமைந்துள்ள கெட்ட தன்மைகளைக் காட்டுவதற்குரிய உதாரணங்களாம். இனி, ஆகாரங்கள் சமைக்கப்படும்போதும், ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டுபோகப்படும்போதும், களஞ்சியத்திலிருக்கும்போதும், விற்பனைக்காகத் திறந்துவைக்கப்படும்போதும் அசுத்தம் அடைகின்றன. மாமிசம் திறந்தபடி தெருவீதியால் கொண்டுபோதல், தோசை அப்பம் அளையப்படுதல் கண்டபடி எறிதல், வீட்டுக்குவீடு கொடுத்து மாறுதல், போஜனசாலைகளிலும் தேநீர்க் கடைகளிலும் சிற்றுண்டிகள் தூசு படிதற்கும் இலையான் விழுதற்கும் வசதியாகத் திறந்துவைத்தல், அசுத்தமான கடைகளிலும் விடுதிச்சாலைகளிலும் வீடுகளிலும் தின்பண்டங்களைக் களஞ்சியத்திலும் கவனமில்லாமல் வைத்துக்கொள்ளுதல் முதலிய இவைபோன்ற செய்கைகள் செயற்கையினுல் உணவுப் பொருட்களில் நோய்களை உண்டுபண்ணும் கிருமிகள் விழுந்து கெட்டுப்போகுந் தன்மைகளைக் காட்டுதற்குரிய உதாரணங்களாம். அழுக்கான நீர்நிலைகளிலுண்டாகும் மட்டிகளும், அசுத்தமான நிலத்தில் அல்லது அசுத்தமான நீரால் பாய்ச்சப்பட்டு வளர்ந்த காய்பிஞ்சுகள் தாமும் நோய்களை வருவிக்கக் கூடும். இத் தேசத்திலுள்ள போஜனசாலைகளிலும் தேநீர்க் கடைகளிலும் தின்பண்டங்களைத் தூசு படியவும், இலையான்கள் விழுந்து மொய்க்கவும் திறந்துவைத்து விற்கும் பழக்கம் ஓர் துலக்கமான திருஷ்டாந்தமாயிருக்கிறது. இவ்வுணவுப் பொருட்களில் இலையான்கள் நூற்றுக்கணக்காய் மொய்த்திருப்பதைக் காணலாம். இவ் விதமாய்த் திறந்துவைக்கப்பட்ட ஒவ்வொரு உணவுப்பொருளும் நோய் தொற்றும் கிருமியினுல் எச்சிலாக்கப்பட்டுக் கெட்டுப்போகிறதற்கு ஏதுவாயிருக்கின்றது. அப்படி உணவுப்பொருட்களைத் திறந்துவைத்து விற்பது சட்ட விரோதமான குற்றமாகும் ஆதலினுல் அவைகளை இலையான்கள் மொய்க்காவண்ணம் கண்ணாடிப் பெட்டிகளில் வைத்திருக்கும்படி செய்வதற்குச் சுகாதாரம்பார்க்கும் உத்தியோகஸ்தர்கள் பெரும் சிரமப்படுகிறார்கள். ஆனுல் அவர்கள் முதுகுகாட்டிப் போனவுடன் தின்பண்டங்கள் மறுபடியும் திறந்துவைக்கப்படுகின்றன. இதனுல் விளையக்கூடிய தீமைகளைப் பொதுச்சனங்கள் உணர்ந்து அத்தகைய கடைகளுக்கும் போஜன சாலைகளுக்கும் போகும் வழக்கத்தை ஒழித்தாலன்றி நன்மை ஒருபோதும் ஏற்படமாட்டாது.

உணவின் மூலமாக வரக்கூடிய தீமைகளை விலக்கிக் கொள்வதற்கு முக்கியமாகச் செய்யவேண்டியது யாதெனில், பாற்சாலைகளையும், தோசை அப்பஞ் செய்யப்படும் இடங்களையும், போஜன சாலைகளையும், இறைச்சிக்கடைகளையும், முறைப்படி சோதனை செய்து சுத்தமாய் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டியதாகும். பாற்பசுக்கள் மாட்டு வைத்தியரால் ஒழுங்காகப் பார்வையிடப்படல் வேண்டும். இறைச்சியடிக்கு மிடங்களும், குளிர்மையாயுள்ள களஞ்சிய சாலைகளும் ஏற்படுத்தப்படல் வேண்டும். உணவுப் பொருட்களை விற்பனைக்குத் திறந்து வைத்திருத்தல், களஞ்சியத்திற் போட்டு வைத்திருத்தல், ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டுபோதல் பங்கிடுதல், சமையல் பாகங்கள் செய்தல், சேர்த்து வைத்திருத்தல் முதலிய தொழில்களைச் சரியான சுத்த முறையாய்ச் செய்து கொண்டால் வியாதிகிருமியும் அழுக்கும் அப் பதார்த்தங்களைப் பழுதாக்க முடியாதென்பது ஓர் வெளியரங்கமான உண்மையாயிருக்கின்றது. கொஞ்சம் கவனஞ் செலுத்தினுல் எவ்வளவு நன்மை உண்டாகும் என்பதைப்பற்றி ஒரு உதாரணம் இங்கு குறித்துக் காட்டுதல் நலம். கொழும்பிலும் மற்றுமிடங்களிலும் அப்பம் பலகாரம் முதலிய தின்பண்டங்கள் விற்பனைகாரரின் கைகளால் பல முறையும் அளையப்பட்டு வரும் ஒருபொதுவான வழக்கமிருக்கிறது. ஆனுல் முதலாவதாக இந்த விற்பனைகாரரின் கைகள் சுத்தமாயிருக்கின்றனவோ இல்லையோவென்றும் இரண்டாவதாக அவரில் ஏதாவது தொற்றுநோய் இருக்கிறதோ இல்லையோவென்றும் அறிந்து கொள்ளுகிறதற்கு என்ன உத்தரவாத மிருக்கிறது. ஆனபடியால் கைகளால் தின்பண்டங்களை அளையாமல் ஒரு குறடு அல்லது இடுக்கி வைத்துப்பாவித்தால் ஒரு கெடுதியும் வரமாட்டாது.

பால் விற்போரிலும் உணவுப் பொருட்கள் விற்போரிலும் பெருந்தொகையானோர் உணவுகளை அசுத்தப்படவிடுவதினுல் வருங் கெடுதிகளைப்பற்றி மிகவும் அலட்சியமாய் நினைக்கிறார்கள். அவர்களுக்கு எவ்வளவு புத்திமதிகளை எடுத்துக்கூறினுலும் அவர்கள் தங்களுடைய அசுசியான பழக்கங்களைக் கைவிடமாட்டார்கள். ஆனபடியால் கட்டாயப்படுத்த வேண்டியதாயிருக்கிறது. ஆனுல் அசுத்த உணவுகளினுல் விளையுந் தீமைகளை அகற்றுவதற்குத் தேவையான சட்டங்கள் இன்னும் பிறப்பிக்கப்படவில்லை. இப்போதிருக்குஞ்சட்டங்கள் மிகப்பழைமையானதாய் இக்காலத்திற்கு உதவியானவையுமல்ல ஆதலால் உணவுப்பொருட்களைப்பற்றியும் மருந்துச்சரக்குகளைப்பற்றியும் ஓர் விரிவான சட்டங்களைச் சட்டசபையார் இப்போது இத்தேசத்திற்கு அத்தியாவசியமாய்த் தேவை.

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

——:O:——

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவுபிடிக்கும் திரிகோணமலை 6-ம் நெம்பர் காசுக்கடைவீதி மு. தாமோதரம்பிள்ளை & இராசலிங்கமென்பவர்களிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்தஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

இல.	திக.	ரூ.	ச.	நகைகளின் விபரம்.
	1926-ம் ஆ௵ 10-ம் ௴			
k1139	31	16		இமிற் கடுக்கன் சோ. 1
	1927-ம் ஆ௵ 1-ம் ௴			
2259	1	10		பழையகறனை சோடி 1
2294	8	75		1 பட்டுச்சங்கிலி 1
2338	5	7		வெ கல்கறனை சோடி 1
2341	5	12		தங்கப்பவுண் 1
2370	6	6		மோதிரம் 1 கல் இல்லை
2383	7	6		½ தங்கப்பவுண் 1
2390	8	9		வளையல் 6
2397	,,	25		பாதசரம் சோடி 1 சல குறைவு
2400	,,	20		ஜேர்மன பவுண் 1 சு இ வெள்ளைக் கடுக்கன் சோடி 1
2427	9	7		நசி பொன்தோடு சோ 1
2460	10	60		பட்டணக்காப்பு சோ. 1
2434	10	57		டி. இ. முறிச்சுக்குத்தி அட்டியல் 1
2466	11	9		பி. இ சிட்டணிகோர்வை 1ல் மணி 26
2496	11	30		தங்கக்காப்பு 1
2542	13	50		சிறு பட்டணக்காப்பு சோடி 1 கல் இ
2553	14	7		வெ பழையகறனை சோடி 1
2575	15	45		சிறு மணிக்கோர்வை 1ல் மணி 29 கு இ
2646	18	6		குவி பழு டிம்மியுடன் பதக்கம் 1 கல் இ
2656	,,	10		செருகுதோடுசோடி 1
2665	19	50		சிறுபட்டணக்காப்புசோ. 1
2667	,,	20		வெ பழு பாதசரம் சோடி 1 சல குறை
2705	21	12		நசிதோடுசோடி 1
2737	22	7		பொன்தோடுசோடி 1
2753	23	50		சிறுபட்டணக்காப்புசோடி 1 பழுது
2767	,,	12		1பட்டுப் பொன்இலைமாலை 1 பழுது
2780	24	13		நிகூர்வாளி மொட்டுக்காதுப்பூ தூக்கியாமுறை பெசோடி 1 சினமணி 4
2793	,,	16	50	உடை சவுக்கமணிக் கோர்வை 1ல் மணி 23 வெ பழையகறனை சோடி 1 சு இ
2798	25	7		பழுதான மூலி பதக்கமுடன் தடுக்கீச்சி 1ல் தடு 69
2811	,,	6		ந இ பொன்தோடுசோடி 1
2850	26	10		கிப்புக்கடுக்கன் சோடி 1
2855	27	12		குவளைக்கடுக்கன் சோடி 1 சு இ
2867	,,	30		பொன்தாலிக்கொடி 1 சு நசி
2869	,,	52		பூரானட்டியல் 1 டி இ
2915	29	6	50	பொன்தோடு சோடி 1
2917	30	50		டி இ பூரானட்டியல் 1
2931	,,	20		பெட்டிமோதிரம் 1 தங்கமோதிரம் 1
2934	31	20	04	பொன் சறடு 1 கு இ
2957	,,	12		தங்கப்பவுண் 1
	2-ம் ௴			
2969	1	18		பழுதான இமிற்தோடுசோ 1
2978	,,	7		மெழுகுகுவளைசோடி 1 சு இ
2983	,,	30		சிரசப்பூவுடன் 5பட்டுமணிக்கோர்வை 1 பழுது
2992	2	60		மணிக்கோர்வை 1ல் மணி 23
2999	,,	23		சிறுகைச்சங்கிலி சோடி 1 பழு கல் 1 இ
3005	,,	50		பழுதான தாலிக்கொடி 1
3030	4	40		பீலிக்காப்பு சோடி 1 சு இ
3055	5	6		சிறுபூசாந்திரமுடன் மணிக்கோர்வை 1ல் மணி 13
3059	,,	10		தங்கவெட்டுக்காப்பு ஒற்றை பூ இல்லை
3 21	9	9		சிறு செவ்வந்திப்பூ சோடி 1
3170	11	135		தொங்குதாலிக்கொடி 1 சு இ
3213	13	90		5 பட்டிலைமாலை 1
3235	14	24		வெ பழையபாதசரம் சோ 1 நல குறைவு
3281	16	40		சங்கிலிக்கொடித்துண்டு 1
3289	,,	60		பட்டணக்காப்புசோடி 1
3292	,,	25		இமிற்கல் திருகுபூ 1 கல் வி
3342	19	9		சிறுமெழுகுகுவளை கல்கடுக்கன் முறைதேய சோடி 1
3335	,,	8	04	தங்கமோதிரம் 1
3340	19	45		டி இ பூரானட்டியல் 1
3341	19	8	04	தகடு 1 பொன்கூடு 1
3354	20	11		தங்கப்பவுண் 1
3355	20	20		சிறுபட்டணக்காப்புஒற்றை
3361	21	55		பொன் தாலிக்கொடி 1 சிறு பொன் தாலிக்கொடி 1
3363	21	57		பட்டணக்காப்பு சோடி 1
3384	22	54		சிறு பொன் சிங்கமுகக்காப்பு சோடி 1 பழுது
3394	22	16		பி இ தாலிக்கொடி 1
3398	22	8		பொன் தோடு சோடி 1 நசி
3425	24	20		இமிற்றோடு சோடி 1
3432	24	35		கூடுடன் கைச்சங்கிலி 1
3434	24	20		சிறு பொன் தாலிக்கொடி 1 சரியல்
3440	25	25		வெ பாதசரம் சோடி 1 சல குறை
3446	25	126		5 பட்டிலைமாலை 1 பழுது
	3-ம் ௴			
3499	1	12		கலாவரைமோதிரம் 1
3536	4	47		பூரானட்டியல் 1
3541	5	20		சிறு கல்தோடு சோடி 1
3544	5	14		சிறு பூசாந்திரமுடன் நசி மணி 59
3563	6	9		தோடுசோடி 1
3570	7	70		நசி பொன் 5பட்டிலைமாலை 1
3575	7	60		பீலிக்காப்பு சோடி 1
3580	7	52		கல்விழு பத சிறு பூரானட்டியல் 1 சு இ பழு
3621	10	14		படக்கூர் 1 வெ அரைஞாண் 1
3661	14	43		புறத்தாலியுடன் தாலிக்கொடி 1 கம்பி குறை
3665	14	24		பழுதான பொன் தாலிக்கொடி 1 [நசி
3670	14	40	04	பழுதான பூரானட்டியல் 1
3690	16	9		கொப்புசிமிக்கி சோடி 1
3692	16	10		தோடு சோடி 1
3719	18	8		மேலிடு சோடி 1
3765	21	6		மெழுகுவளை சோடி 1
3773	21	45		பூரானட்டியல் 1 சு இ பழு.
3792	23	23		முறுக்குக்காப்பு சோடி 1 கல் இல்லை
3801	23	13		பி இ நசி மணிக்கோர்வை 1ல் மணி 28 வெ நசி குழற் காப்பு சோடி 1
3803	23	7		பழைய ஆடுக்குக்காப்பு சோடி 1
3817	24	18		சு இ பதமுடன் பழுதான சவுக்கமணிக்கோர்வை 1ல் மணி 21
3824	24	6		பொன் பின்கொக்கி 1
3830	25	20		மு இ பழு பொட்டுப் பத பொன் பூரானட்டியல் 1
3856	27	9	04	வெ பழையகறனை சோ 1
3898	30	8		பின்கொக்கி 1
3920	31	12		இருவிதவளையல் 8
	4-ம் ௴			
3934	1	5	50	பெண்பிள்ளைகுச்சு சோ 1
3938	2	15		பின் பழு சிறு மணிக்கோர்வை 1ல் மணி 25
3965	2	50		4பட்டு இலைமாலை 1 பழுது
3977	3	65		பூரானட்டியல் 1 இமிற தோடு சோடி 1
4027	6	40		1பட்டிலைமாலை 1 பழுது
4038	6	12		வெ பழுதான கொலுசு சோடி 1
4059	7	5	50	சிறுபொன்காப்பு சோடி 1 பூ இ
4074	8	15		வெ பாதசரம் ஒற்றை சல குறை, வெ பழுதான பாதசரம் ஒற்றை
4099	9	30		தாலியுடன் பழு பொன் தாலிக்கொடி 1
4100	9	30		தங்க வெட்டுக்காப்பு சோ 1
4109	10	8		சிறு தங்கக்காப்பு 1 சிறு டாமி 1
4118	10	17		இமிற்தோடு சோடி 1
4119	10	15		வெ கொலுசு சோ 1 பழு
4139	11	25		வெ பாதசரம் சோடி 1
4147	11	6	50	கைவிலங்கு 1
4152	11	12		வளையல் தகடு 6 பூ 4 கால் 1 இல்லை
4155	12	8		இ. கல் முகப்பு சோடி 1 கல் விழு
4156	12	6		பழைய பொன் தோடு சோடி 1 கம்பி இ
4169	12	9		சிறு பவுண் வெட்டுக்காப்பு ஒற்றை
4172	12	70		பட்டணக்காப்பு சோடி 1
4193	15	12		தங்கமோதிரம் 1
4199	15	13		பெண் பிள்ளைக்குச்சு சோடி 1 புலிபடி பின் சோடு 1 பொன் மிக்னி ஒற்றை வெ, சிறு பழு பாதசரம் சோடி 1
4208	16	20		பூசாந்திரமுடன் சினமணி 4 நசிமணி 15
4215	,,	16		சிறு 4பட்டுமணிக்கோர்வை 1
4226	,,	9		கல்கறனை சோடி 1
4254	18	35		கைச்சங்கிலி 1
4257	,,	60	04	தாலிக்கொடி 1 பழுது
4259	,,	6		பொன்கொப்பு சோடி 1
4269	,,	6		சிறு இதழ்ப்பூ 1
4331	21	8		சிறு இமிற்தோடு சோடி 1 படக்கூர் 1
4376	23	80		பொன் 5 பட்டு இலைமாலை 1 பழுது
4382	24	20		இமிற் தோடுசோடி 1 நசி
4398	25	28		கைச்சங்கிலி 1
4428	27	6		வெ பழையகறனை சோடி 1
4436	,,	40		பழுதான தாலிக்கொடி 1
4443	,,	20		பழு பத சவுக்கமணிக்கோர்வை 1ல் இருவிதமணி 25
4461	29	6		இ கல்மோதிரம் 1
4464	,,	25		சிறுபழைய சங்கிலியட்டியல் 1 டிப்பில்லை.

விற்பனவு:—மேலனுஸ புரட்டாதி௴ 13ந் திகதிக்குச் சரியான 1928-ம் ஆண்டு செப்டெம்பர் ௴ 28உ வெள்ளிக்கிழமைகாலை 9 மணி தொடக்கம் ஏலபட்டகரைப்பிறீங்கலாக விருதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

க. கதிர்காமத்தம்பி,
வெத்திஸ்மேஸ்தர்,
(Mis. 1288) 31—8—28.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by Pandit V. T. Sambandhan for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai.